**கவனிக்க.-** *2009.01.16 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1655 - 2010 මැයි මස 21 වැනි සිකුරාදා - 2010.05.21

*1655 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 650 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 665 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2010, மே மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, மே மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - காலி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாகபதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, ஆனி மாதம் 18 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, சித்திரை 30.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | பலபிற்றிய | வேலிதர பிரிவின் காலி மாவட்டத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், காலி |

5-415

---

## நீதி , சட்ட மறுசீரமைப்பு அமைச்சு

### தொழில் நியாய சபைப் பேச்சு மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்) மற்றும் (சிங்களம்/ஆங்கிலம்) பதவிகள்

நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் கீழுள்ள தொழில் நியாயசபை அலுவலகங்களில் பேச்சு மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) மற்றும் (சிங்களம்/ஆங்கிலம்) பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்தல் தொடர்பாக வெளியிடப்பட்ட 2009, நவெம்பர் 27 ஆந் திகதிய 1630 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன் அதற்காக பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கையர் களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2. கல்வித் தகைமைகள் :**

(அ) (i) மொழி பெயர்ப்பு சம்பந்தப்பட்ட இரு மொழிப் பாடங்கள் உட்பட 4 பாடங்களுக்காக திறமைச் சித்திகளுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம் உட்பட

6 பாடங்களில் இலங்கை சிரேட்ட தராதர அல்லது க. பொ. த. (சா. த.) அல்லது தே. பொ. த. பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(ii) ஒரு மொழியிலிருந்து (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) மற்றுமொரு மொழிக்கு அல்லது மொழிகளுக்கு பேச்சு மொழிபெயர்ப்புச் செய்யக்கூடிய ஆற்றல் இருக்க வேண்டும்.

3. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையின்/ மாகாண அரசாங்க சேவையின் பதவிகளை வகிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு இவ்வயதெல்லை ஏற்புடைத்தாகாது.

4. **சம்பள அளவுத்திட்டம்**.- MN-1-2006 - ஏ(iv) (படிநிலை 06) மாதாந்தம் ரூபா 13,845- 5×145 - 11×170-10×240 -10×320 - ரூபா 22,040.

5. **ஆட்சேர்ப்பு முறை**.- 15/ 90 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின்படி மேற்குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையொன்றினதும் வாய்மூல பரீட்சையொன்றினதும் பெறுபேறுகளின்மேல் திறன் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

1. எழுத்துப் பரீட்சை.- மொழி பெயர்ப்புச் செய்யும் ஆற்றலை பரீட்சித்துப் பார்க்கும் 2 மணிநேர வினாத்தாள்

மொத்தப் புள்ளிகள் 100

2. வாய்மூலப் பரீட்சை :

(i) எழுத்துப் பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் வெற்றிடங்களின் எண்ணிக்கையின்படி 1 : 5 விகிதாசாரத்தில் வாய்மூல நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்றனர்.

மொத்தப் புள்ளிகள் 50

(ii) வாய்மூல நேர்முகப் பரீட்சையின்போது வாய்மூல பேச்சு மொழி பெயர்க்கும் திறமையை கவனத்திற் கொள்ளப்படும்.

7. **சேவையின் நியமன நியதிகள் :**

(அ) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியமுரித்துடையது மாகும். விதவைகள் தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செலுத்துதல் வேண்டும் ;

(ஆ) இப்பதவிக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை ஆண்டுக்கு ஒரு முறை நீதிச் செயலாளரால் நடாத்தப்படும் ;

8. **சேவை நிபந்தனைகள்**.- தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 முதல் 12 வரையிலான பிரிவுகள் ஏற்புடையதாகின்றன.

9. இவ்வறிவித்தலின் கீழ் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்கள் 2010.06.10 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ-

"செயலாளர்,
நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சு,
மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி,
கொழும்பு 12"

என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் இட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் "தொழில் நியாய சபைப் பேச்சு மொழிபெயர்ப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். ஏலவே அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையிலுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத்/ நிறுவனத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.

10. விண்ணப்பப்பத்திரத்தை பூரணமாக நிரப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படுவதுடன், விண்ணப்பம் அல்லது அது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தபாலில் தொலைந்து விட்டன எனச் செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

11. விண்ணப்பதாரர் ஒருவரினது விண்ணப்பத்தில் ஏதேனுமொரு பொய்யான தகவல் காரணமாக அவர் தகுதியற்றவராக்குவதற்கும் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து அவரை சேவையிலிருந்து விலக்குவதற்கும் ஆளாவார். இதில் குறிப்பிடப்படாத விடயமொன்றைப் பற்றி தீர்மானம் எடுக்கும் அதிகாரி நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளராவார்.

செயலாளர்,
நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சு.

நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சு,
கொழும்பு 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சு**

**தொழில் நியாயசபைப் பேச்சு மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்) மற்றும் (சிங்களம்/ஆங்கிலம்) பதவிகள்**

இலக்கம் :.............................
(அலுவலக உபயோகத்துக்காக)

1. முழுப் பெயர் :- (சிங்களத்தில்/தமிழில்) :----.
( ஆங்கிலத்தில் ) :----.

2. முதலெழுத்துக்களுடன் பெயர் :- (சிங்களத்தில்/தமிழில்) :----.
(ஆங்கிலத்தில்) :----.

3. முழுப் பெயர் :- (சிங்களத்தில்/தமிழில்) :----.
(ஆங்கிலத்தில் ) :----.

3. சொந்த முகவரி :- (சிங்களத்தில்/தமிழில்) :----.
(ஆங்கிலத்தில் ) :----.

4. அலுவலக முகவரி :----.

5. தொலைபேசி இல. :----.

6. தேசிய அடையாள அட்டை இல. :----.

7. பிறந்த திகதி :----.

8. 2010.06.10 ஆந் திகதிக்கு வயது :-

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

9. ஆணா/பெண்ணா என்பது :----.

10. தேசிய இனம் :----.

11. கல்விகற்ற மொழிமூலம் :----.

12. விண்ணப்பிப்பது பேச்சு மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) பதவிக்காகவா அல்லது (சிங்களம்/ஆங்கிலம்) பதவிக்காகவா என்பது ----.

13. கல்வித் தகைமைகள் :----.
க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை :-

| பாடசாலை | பாடம் | சித்தி | ஆண்டு |
|---|---|---|---|
| | | | |

14. பிற தகைமைகள் :----.

15. இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் அத்தாட்சிப் படுத்துகிறேன். இதில் அடங்கியுள்ள தகவல்களில் எவையேனும் பொய்யானவை அல்லது தவறானவை என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து நான் தகுதியற்றவன் ஆவேன் என்றும் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரிய வருமிடத்து எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நான் விலக்கப்படுவேன் என்றும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

**விண்ணப்பதாரர் அரச சேவையில் உள்ளவராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................................. திணைக்களத்தில்/அமைச்சில்/மாகாண சபையில் .................................. ஆக சேவை செய்கின்றார் என்றும் மேலே காட்டப்பட்டுள்ள விபரங்கள் சரியானது என்றும் அவரது வேலைகள், வருகை திருப்திகரமாக உள்ளன என்றும் நான் சான்றுபடுத்துகின்றேன். இப்பதவிக்காக தெரிவுசெய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

-----,
திணைக்களத் தலைவரின்/அதிகாரம்-
பெற்ற அலுவலரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

5-416

## இலங்கை வான்படை

வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர வான்படையில் கீழே தரப்பட்டுள்ள தொழில் துறைகளில், வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள் கோரப்பட்டுள்ளன :

**1. தொழில் துறையும் தேவைப்படும் கல்வித் தகைமைகளும் :**

(அ) வானூர்தி பொறியியல் :

(1) வானூர்தி இயந்திரவியலாளர் (ஆண்/பெண்)
(2) வான் அமைப்பு எந்திரவியலாளர் (ஆண்/பெண்)
(3) வானூர்தி மின்னியல் கருவிகள் எந்திரவியலாளர் (ஆண்/பெண்)
(4) கருவிகள் பாதுகாப்பு உதவியாளர் (ஆண்/பெண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச் சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.

(ஆ) மின்னணுவியலும் தொலைத்தொடர்பும் பொறியில் :

(1) கணனி தொழினுட்பவியலாளர் (ஆண்)
(2) வான் தொலை தொடர்பாளர் (ஆண்)
(3) தொலைபேசி இயக்குனர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.

(இ) பொது பொறியியல் :

(1) ஆயுத இயந்திரவியலாளர் (ஆண்)
(2) மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர் (ஆண்)
(3) வான் படப்பிடிப்பாளர் (ஆண்)
(4) பொது இயந்திரவியலாளர் (ஆண்)
(5) வானூர்தி காய்ச்சிப் பொருத்தும் உதவியாளர் (ஆண்)
(6) மேற்பரப்பு தொழினுட்ப உதவியாளர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச்சித்தி மேலதிக தகைமையாகும்.

(7) இயக்குனர் மோட்டார் போக்குவரத்து (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். இலகு வாகன இயக்குனர் அனுமதிப்பத்திரம் இருத்தல் கட்டாயமாகும்.

(ஈ) *சிவில் பொறியியல் :*

(1) மின்சார வேலையாளர் (ஆண்)
(2) பொறி வேலையாளர்/ இயந்திர தொழினுட்ப உதவியாளர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். ஆங்கில மொழியில் சித்திபெற்றிருத்தல் மேலதிக தகைமை யாகும்.

(உ) *வைத்தியம் :*

(1) தாதி உதவியாளர் (ஆண்/பெண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் திறமைச் சித்தியும் மேலதிகமாக ஒரு பாடத்திற்கு திறமைச் சித்தியும், ஆங்கிலத்தில் சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் உயிரியல் விஞ்ஞானம், இணைந்த கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல், விவசாயம் ஆகியவற்றில் 3 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் உயர் பயிற்சிநெறிக்கான தகைமையாகக் கருதப்படும்.

(ஊ) *பல் வைத்தியம் :*

(1) பல் வைத்திய உதவியாளர் (ஆண்/பெண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் திறமைச் சித்தியும் மேலதிகமாக ஒரு பாடத்தில் திறமைச் சித்தியும், ஆங்கிலத்தில் சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் உயிரியல் விஞ்ஞானம், இணைந்த கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல், விவசாயம் ஆகியவற்றில் 3 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் உயர் பயிற்சிநெறிக்கான தகைமையாகக் கருதப்படும்.

(எ) *உபகரணம் :*

(1) வழங்குனர்/வழங்கல் உதவியாளர் (ஆண்/பெண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தியும் கணிதம்/ விஞ்ஞானம்/ வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.

(2) உணவக மேற்பார்வையாளர் (பெண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.

(ஏ) *நிர்வாகம் :*

(1) எழுதுவினைஞர்/நிர்வாக உதவியாளர் (ஆண்/பெண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலத்தில் சித்தியும், கணிதம்/ விஞ்ஞானம்/ வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.

(2) கணக்கியல் எழுதுவினைஞர்/ கணக்கியல் உதவியாளர் (ஆண்/பெண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலத்தில் சித்தியும், கணிதம்/ வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.

(ஐ) *தொழிற்பாடுகள் :*

(1) வான் தொழிற்பாடுகள் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தியும், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.

(2) தீயணைப்பாளர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலத்தில் திறமைச் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.

(3) இசைக்கலைஞர் (பெண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். சங்கீதம், பாடும் திறமை தொடர்பான அறிவும் அனுபவமும் மேலதிக தகைமையாகும்.

(4) உடற்பயிற்சியாளர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். தேசிய மட்டத்தில் விளையாட்டு தொடர்பான தகைமை கவனத்தில் கொள்ளப்படும்.

(5) நாய்களை கையாள்பவர் (ஆண்)

(6) பூமி தொழிற்பாட்டாளர் (பெண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.

(ஒ) பொலிஸ் :

(1) பொலிஸ் (ஆண்/பெண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ், ஆங்கில மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.

***2. ஏனைய தகைமைகள்.*** - இலங்கை நிரந்தர வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொதுத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) *தேசிய இனம்.-* ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) *வயது :*

***ஆண்.*** - 2010.07.20 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 23 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

***பெண்.*** - 2010.07.20 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) *உயரம் :*

***ஆண்.*** - 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும்

***பெண்.*** - 5 அடி 3 அங்குலமும் அதற்கு மேலும்

(ஈ) *உடல்நிறை.-* உடற்பருமன் சுட்டி $(BMI) = \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம் (மீ)}^2} < 25$

(உ) *பார்வை வர்ணப்பதிவு மட்டம்.-* CP2

(ஊ) *தொலைப் பார்வை.-* இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

(எ) *குடியியல் நிலை.-* விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். (வான்படையில் இணைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைவதுடன் தொழிற்பயிற்சியைப் பூர்த்திசெய்து ஓராண்டு கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்).

3. பந்தி 01, 02 இல் உள்ள தேவைப்பாடுகளை அல்லது கல்வித் திறமைகளை நிறைவு செய்யாதவர்களுமான விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவர். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், கண் பார்வை பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உடற் தகைமை மட்டத்தை கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள்.

4. விளையாட்டுத் துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் முறையாக கவனத்திற் கொள்ளப்படும்.

**5. சேவை நிபந்தனைகள் :**

(அ) வான்படை வீரர்/வீராங்கனைகள் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட திகதியிலிருந்து வான்படை சட்டத்திற்கும் ஏனைய வான்படை ஒழுங்குவிதிகளுக்கும் வேறு கட்டளைகளுக்கும் உட்பட்டவர்களாவர்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் தொழில் துறைக்குரிய வான்படை வீரர்/வீராங்கனைகள் அடிப்படைப் பயிற்சியும் அதன் பின் தொழில்துறைப் பயிற்சியும் வழங்கப்பட்டு, அவர்கள் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும், மிகக் கஷ்டமான நிலைமையிலும் இரவு பகலாக தமது தாய்நாட்டுக்குள் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்ற ஆயத்தமாதல் வேண்டும்.

**6. தொழிலில் அமர்த்தப்படுதல் பற்றிய நிபந்தனைகள்.**- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிரந்தர வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 12 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். அதில் தொடர்ச்சியாக 8 ஆண்டுகள் சேவையாற்றுமாறு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளுமாறு கேட்டுகப்படுவார்கள். மேலும், 8 ஆண்டுகள் பூர்த்தியானதும் அதிலிருந்து இன்னும் 4 ஆண்டுகள் மீண்டும் நிரந்தர உப சேவையில் சேவையாற்றுதலானது, மீண்டும் அழைக்கப்படும்போது சமுகமளிக்க வேண்டும். 8 ஆண்டுகள் கழிந்த பின் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

**7. அரச கரும மொழித் தேவைப்பாடுகள்.**- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கைக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

**8. சம்பளமும் கொடுப்பனவுகளும் :**

(அ) ஒரு வருடத்திற்கு வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கு ஏற்புடையதாக திரட்டப்பட்டுள்ள சம்பள விகிதங்கள் பின்வருமாறு :-

| | | |
|---|---|---|
| வானூர்தியாளர்- | : | ரூபா 1,68,000-6 x 1,440-21 x 1,800 = ரூபா 2,14,440 |
| முன்னணி வானூர்தியாளர்- | : | ரூபா 1,72,320-3 x 1,440-24 x 1,800 = ரூபா 2,19,840 |
| கோப்ரல் | : | ரூபா 1,76,640-1 x 1,800 - 17 x 2,520 = ரூபா 2,21,280 |
| சார்ஜன்ட் | : | ரூபா 1,80,240-3 x 1,800 - 9 x 2,520 - 15 x 3,480 = ரூபா 2,60,520 |
| பிளைட் சார்ஜன்ட் | : | ரூபா 1,83,120-10 x 2520 - 19 x 3,480 = ரூபா 2,74,440 |
| அதிகாரம்பெற்ற அலுவலர்- | : | ரூபா 2,11,800-27 x 3,480 = ரூபா 3,05,760 |

(ஆ) வேறு கொடுப்பனவுகள் :

(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூபா 5,250 ;

(2) கடினப்படி மாதமொன்றுக்கு ரூபா 600 ;

(3) கஷ்டப் பிரதேசங்களில் சேவை புரிபவர்களுக்கு மேலதிகமாக மாதமொன்றுக்கு ரூபா 3,900 வழங்கப்படும் ;

(4) விசேட கடினப் படி.- விசேட கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 2,400 வழங்கப்படும் (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 80 வீதம் ;

(5) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு.- சேவைக்காலம் 5 வருடம் பூர்த்தியடைந்த பின் இக்கொடுப்பனவு வழங்கப்படும் (மாதமொன்றுக்கு ரூபா 250 இல் இருந்து ரூபா 850 வரை) ;

(6) உணவு கொடுப்பனவு.- வெளியில் தங்கும் வான்படை வீரர்/ வீராங்கனைகளுக்கு மாதமொன்றுக்கு ரூபா 9,262.20 (உள்ளே தங்கும் வான்படை வீராங்கனைகளுக்கு இலவச உணவு வசதி) ;

(7) தங்குமிட வசதி.- உள்ளே தங்கும் வான்படை வீரர்/ வீராங்கனைகளுக்கு இலவசம் ;

(8) பிரயாணம்.- ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரத பயணச்சீட்டுகள் (வீரர்/வீராங்கனைக்கும் கணவருக்கும் பிள்ளைகளுக்கும்). உள்ளே தங்கியிருக்கும் வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கு மாதமொரு தடவை சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு ;

(9) கலவரகாலப்படி.- நிரந்தரமான நிலையங்களுக்கு வெளியே கடமைக்குச் செல்லும்போது இக்கொடுப்பனவு வழங்கப்படும் (விவாகமானவர், விவாகமாகாதவர் என்பதற்கிணங்க கொடுப்பனவு வேறுபடும்) ;

(10) தகைமைச் சம்பளம்.- விசேட பயிற்சிநெறியில் தகைமை பெற்றவர்களுக்கு அல்லது வான்படைச் சேவைக்கு விசேட பெறுமதிவாய்ந்த தகைமை கொண்டிருப்பவர்களுக்கு இத்தகைமைச் சம்பளம் வழங்கப்படும். மாதமொன்றுக்கு ஆகக்கூடிய தொகை ரூபா 637.50 வழங்கப்படும் ;

(11) நன்னடத்தைப் பதக்கம் சம்பளம்.- மிக உயர்ந்த தரத்திலான நடத்தையும் பொது ஒழுக்கமும் கொண்ட ஆளணியினருக்கு மாதமொன்றுக்கு ரூபா 30 இலிருந்து ரூபா 204 வரை வழங்கப்படும் ;

(12) சீருடைக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 170 வழங்கப்படும் ;

(13) மீள அமர்த்தலுக்கான சம்பளம்.- மீள அமர்த்தப்பட்ட காலப்பகுதியின்போது மாதமொன்றுக்கு ஆளணியினர் 300 ரூபாவுக்கு உரித்துடையவராவர்.

(14) மருத்துவம்.- வான்படையின் செலவில் வான்படை வீரர்/ வீராங்கனைகளுக்கும் திருமணமாயின் அவர்களது குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

(15) வெளியில் தங்கியிருப்பவர்களும் வேலைத்தலத்திலிருந்து 30 மைல் (கி. மீ. 48) சுற்றுவட்டத்தில் வாழ்பவர்களுமான வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கு இ. போ. ச. பேரூந்து வண்டிகளில் வேலைக்கென இலவசமாக பிரயாணச் சீட்டு வழங்கப்படும்.

(16) விவாகமான வான்படை வீரர்/ வீராங்கனைகளுக்கு அரசாங்கத்திற்குரிய விவாகமானவர்களுக்கான விடுதியில் குடியிராவிடில் மாதமொன்றுக்கு ரூபா 1,200 இருந்து 3,300 வரை வாடகைப்படியொன்றுக்கு உரித்துடையவராவர்.

(17) விரிவுரையாளர் கொடுப்பனவு.- மாதமொன்றுக்கு ரூபா 425 இலிருந்து ரூபா 510 வரை கொடுப்பனவுக்கு உரித்துடையவராவர்.

(18) வேறு கொடுப்பனவுகள் (பிரிந்திருத்தல் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்றுதல்) இலங்கை வான்படை சம்பள சட்டதிட்டங்களுக்கு அமைய இக்கொடுப்பனவு வழங்கப்படும்.

(19) ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவு என்பன காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச்சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை வீரர்/வீராங்கனைகள் அனைவரும் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப் படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

9. **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்**.- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2010.05.31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "பிரதான ஆட்சேர்ப்பு அதிகாரி, ஆள்திரட்டற் சபை, இலங்கை வான்படை, ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரர் ஒரு தொழிலுக்கு மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும். அத்தோடு ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஒருவர் ஒரு நேர்முகப் பரீட்சைக்கு மாத்திரம் தோற்றலாம். முடிவுத் திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை, வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பகாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் /சபையின்/குடியியல் தாபனத்தின் தலைமையதி

காரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பகாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பகாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப்பிரதி (கல்விச் சட்டக் கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரித்தெடுப்பு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா) ;

(2) தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைக்கு ஆதாரமான சான்றிதழ் ;

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்ற தொழில்துறை/தொழில்நுட்பப் பயிற்சி அத்துடன்/அல்லது அனுபவம் ஏதுமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ் ;

(4) இரண்டு நற்குணச் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று இறுதியாக கல்வி பயின்ற பாடசாலை அதிபரினதும் மற்றையது விண்ணப்பக்காரரை தனிப்பட்ட முறையில் நன்கறிந்த பொறுப்பு வாய்ந்த ஒருவரிடம் இருந்து அல்லது விண்ணப்பக்காரரின் தொழில்தருநரிடமிருந்து (தொழில் புரிவாராயின்) ;

(5) விளையாட்டுத்துறை நடவடிக்கைகள் கெடெற்றிங் முதலிய வற்றிற்கு ஆதாரமான சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பகாரர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டா.

(உ) ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

10. நேர்முகப் பரீட்சை இலங்கை வான்படை ஏக்கல நிலையத்தில் நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்குத் தகுந்தவரெனக் கருதப்படும் விண்ணப்பகாரர்கள் விமானப்படை ஆள்திரட்டற் சபையொன்றின் முன்னிலையில் தங்கள் சொந்தச் செலவில் நேர்முகப் பரீட்சை யொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும். விண்ணப்பதாரர்களுக்கு திகதி, நேரம் என்பன தனித்தனியாக அறிவிக்கப்படும்.

11. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டை வைத்திராத விண்ணப்பக்காரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றை சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணப்பக்காரரும் தேசிய அடையாள அட்டையின்றி சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்.

12. தங்கள் இறுதி நேர்முகப் பரீட்சைகளையடுத்து பொருத்தமானவர் களாக இருக்கக்கூடிய விண்ணப்பக்காரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப்படுத்தப்படுவர். (உடற் பயிற்சியாளர், இசைக் கலைஞர்கள் செய்கை பரீட்சைக்கு தோற்றுவிக்கப்படுவர்.) பொருத்தமான விண்ணப்பக்காரர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற் தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தேர்வுசெய்யப்படுவர்.

13. விண்ணப்பக்காரரொருவருக்கு விதப்புரை வழங்க விரும்பும் எவரும் நற்சாட்சிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பக்காரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தணித்தல் அத்தகைய விண்ணப்பக்காரரை தகைமையிழக்கச் செய்யும்.

14. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்திற்கும் விண்ணப்பக்காரரை ஆளாக்கிவிடும்.

15. நேர்முகப் பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பக்காரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

டப்ளியூ. டி. ஆர். எம். ஜே. குணதிலக,
எயர் சீப் மார்ஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வான்படை**

இலங்கை வான்படையில் வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கான பதவி

1. முழுப் பெயர் :----.

(தேசிய ஆளடையாள அட்டைப்படி)

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.
3. விண்ணப்பிக்கும் தொழில் துறை :----.
4. அஞ்சல் முகவரி :----.
5. நிரந்தர முகவரி :----.
6. நிரந்தர முகவரியின் பொலிசு நிலையம் :----.
7. மாவட்டம் :----.
8. தேர்தற் தொகுதி :----.
9. கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.
10. தொலைபேசி இலக்கம் :----.
11. பிறந்த திகதி :----.
12. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.
13. உயரம் : அடி ---- அங்குலம் ----.

14. க. பொ. த. (சா. த.) பரீட்சை :----.

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

15. க. பொ. த. (உ. த.) பரீட்சை :----.

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

16. பதவிக்குரிய எவையேனும் விசேட தகைமைகள் :----. (தொழில்நுட்பம், தொழிற்பயிற்சி அனுபவம் முதலியன)

17. விளையாட்டுத் துறையில் விசேட சாதனைகள் பற்றிய விபரம் : ----.

18. பாடசாலையில் அல்லது வெளி ஒழுங்கமைப்புகளில் குறிப்பிடத்தக்க வேறு சாதனைகள் :----.

19. ஆயுதப்படைகளுக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்திருந்தால் விபரங்கள் தரவும் :----.

20. நீர் குடியியல் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா ? :----.

21. நற்சாட்சிப்பத்திரங்கள் பற்றிய விவரங்கள் :

| பெயர் | பதவி | நிரந்தர முகவரி |
|---|---|---|
| | | |

22. விண்ணப்பகாரரால் கையொப்பமிட வேண்டிய வெளிப்படுத்துகை :

மேலேயுள்ள வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என் மீது ஆணையாக வெளிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிரந்தர வான்படையில் வான்படை வீரராக தெரிவுசெய்யப்படும் விண்ணப்பக்காரர்கள் தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கை முறையையும் அவற்றுக்குரிய விதிகளையும் நான் வாசித்து விளங்கிக்கொண்டுள்ளேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

5-495

## நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சு

நீர்பாசனத் திணைக்களம்

### நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கான பொறியியல் உதவியாளர் பதவி

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் இலங்கை பொறியியல் உதவியாளர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கான பொறியியல் உதவியாளர் பதவிகளை நிரப்புவதற்கென விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவும் ''நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசன திணைக்களம், இல. 230, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7'' என்ற முகவரிக்கு 2010.06.10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியல் உதவியாளர் சேவையின் வகுப்பு II தரம் II'' இற்கான பொறியியல் உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம் என எழுதி அனுப்புதல் வேண்டும்.

இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**2. சம்பள அளவுத்திட்டம்.**- பயிற்சிநெறியை வெற்றிகரமாக பூர்த்திசெய்த பின்னர் மாதாந்த திரட்டிய சம்பளம் : ரூபா 16,205 : 15,005-4X180-14X240- ரூபா 19,085 (இது மாதாந்த சம்பள நிலை ரூ. 16,205 க்கு முன்னர் வினைத்திறமைக்காண் பரீட்சையை உள்ளடக்கியுள்ளது.)

**3. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் ;

(ஆ) 2010.06.10 ஆந் திகதியன்று 30 வயதுக்கு மேற்படாமலும் 18 வயதுக்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும். (மாகாண, அரச சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதெல்லையானது ஏற்புடையதன்று.) ;

(இ) நன்னடத்தை உடையவராயிருத்தல் ;

(ஈ) பரீட்சார்த்தி நாட்டின் எப்பாகத்திலும் சேவை செய்யக்கூடிய உடல் தேகாரோக்கியத்தைக் கொண்டிருக்க வேண்டும். எனவே தேகாரோக்கியத்தை உறுதிப்படுத்துவதற்கென அரசாங்க மருத்துவ பரிசோதனைக்குட்படல் வேண்டும் ;

(உ) பரீட்சார்த்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள I அல்லது II இல் ஏதாவது ஒரு கல்வித் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு தமிழ், கணிதம், ஆங்கில மொழி, விஞ்ஞானம் ஆகிய க. பொ. த. (சா. த.) பரீட்சையில் வேறு ஏதாவது ஒரு பாடத்திலும் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அத்துடன்

க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் பௌதீகவியல், தூயகணிதம் உட்பட நான்கு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அல்லது

புதிய பாடத்திட்டத்திற்கிணங்க க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் இணைந்த கணிதம், பௌதீகவியல் உள்ளடங்கலாக மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(ii) கட்டுப்பத்த பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரிகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ் (குடிசார் பொறியியல்) அத்துடன் உரிய துறையில் ஒரு வருட பிரயோகப் பரீட்சையைப் பூர்த்தி செய்ததுடன் அளவையியல், மட்டமிடல், நீர்ப்பாசனப் பொறியியல் ஆகிய பாடங்களில் சித்தியடைந்தமைக்கான உரிய சான்றிதழ்கள்.

**குறிப்பு**.- பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளாதவர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும்போது அதே சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. ஆட்சேர்க்கப்படும் முறை.- (அ) ஆட்சேர்ப்பானது பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 15/90 இற்கிணங்கவும் தாபன விதிக்கோவைக் கிணங்கவும் மேற்கொள்ளப்படும்.

(ஆ) (i) பயிலுனர்கள் பிரிவு 3உ (1) இன்கீழ் தகைமைகளுக்கிணங்க தெரிவுசெய்யப்பட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கல்கமுவ திணைக்கள பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் இரண்டு வருட கால முழுநேர வதிவிடப் பயிற்சி வழங்கப்படும். குறித்த பரீட்சையில் இறுதிப் பரீட்சை உள்ளடங்கலாக குறிப்பிட்ட பரீட்சையில் சித்தியடைந்த பயிலுனர்கள் பிரயோகப் பரீட்சையொன்று நடாத்தப்படும். அதில் சித்தியடைந்தவர்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் நீர்ப்பாசனப் பொறியியலாளர் சான்றிதழ்களைப் பெறும் உரித்துடையவராவர்.

(ii) நீர்ப்பாசனப் பயிலுனர்கள் குறிப்பிட்ட பரீட்சையில் சித்தியடையத் தவறின் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானத்தின்படி பயிற்சி நெறியைத் தொடர அனுமதிக்கப்படுவர். இச்சித்தியின்மைக்குக் காரணமாக கடமையில் அலட்சியம், ஆர்வமின்மை, வரவில் பலவீனம் போன்றவையாக இருக்கக் கூடாது. சித்தியடையத் தவறிய பயிலுனர்கள் இறுதிப் பரீட்சையுட்பட அனைத்துப் பரீட்சைகளிலும் சித்தியடைதல் வேண்டும். இப்பரீட்சையானது பயிற்சிநெறி நீடிப்புக்காலம் முடிவடைந்ததும் இடம்பெறும். இப்பரீட்சையிலும் இவர்கள் சித்தியடையத் தவறின் அவர்களது சேவை முடிவுபெறும்.

(iii) பயிற்சிக் காலத்தின்போது கருத்தரங்குகளுக்கு அல்லது உரைகளுக்கு பயிலுனர்கள் 80% குறைந்தபட்சம் வருகை தந்து பயிற்சிநெறியில் திருப்திகரமான பதிவையும் கொண்டிராதவர்கள் குறித்த பரீட்சையில் அமர்வதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது. அவ்வாறே பயிற்சிநெறியும் முடிவுறுத்தப்படும்.

(iv) பிரிவு 3உ (ii) கல்வித் தகைமைகளுக்கமைய ஆட்சேர்க்கப்படும் பயிலுனர்கள் (06) ஆறுமாத கால பயிற்சிநெறியின் முடிவில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் வேண்டப்படும் பிரயோகப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். இப்பயிற்சி நெறியானது, பிரசங்கங்களையும் அல்லது உரைகளையும் பிரயோகப் பயிற்சியையும் கொண்டதாகும்.

(v) பயிலுனர்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் வெளிக்களப் பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யின் ஆட்சேர்ப்புக்குப் பின் வேண்டப்படும் ஆறுமாத கால பயிற்சிநெறி விலக்களிக்கப்படும். அத்தோடு அவர்கள் அனைத்து பிரயோகப் பரீட்சையிலும் சித்தியடைதல் அவசியமாகும்.

(இ) அனைத்து பிரசங்கங்களும் அல்லது உரைகளும் பயிற்சிநெறிகளும் ஆங்கில மொழியிலேயே நடாத்தப்படும்.

(ஈ) பயிற்சிநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவர்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கு நியமிக்கப்படுவர்.

5. **சேவை நிபந்தனைகள்** :

(அ) இப்பதவிகள் நிரந்தரமானவை. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பங்களிப்பு ஓய்வூதிய சம்பள நிதிக்குக் கொடுப்பனவு செலுத்தப்படல் வேண்டும். தற்போது ஓய்வூதியப் பதவிகளில் உள்ளவர்கள் ஓய்வூதியம் பெற உரித்துடையவராவர்.

(ஆ) விண்ணப்பதாரர்கள் முதலில் நீர்ப்பாசனப் பயிலுனர்களாக ஆட்சேர்க்கப்படுவர்.

(இ) நீர்ப்பாசனப் பயிலுனர்களுக்கு பயிற்சிக்காலத்தின்போது கொடுப்பனவு ஒன்று செலுத்தப்படும். பிரிவு 3உ(ii) கல்வித் தகைமைகளுக்கமைய ஆட்சேர்க்கப்படும் நீர்ப்பாசனப் பயிலுனர்கள் பயிற்சிக்காலம் முழுவதும் கீழ்க்காணப்படும் கொடுப்பனவைப் பெறுவர் :

முதலாவது வருடத்தின்போது (மாதாந்தம்) - ரூ. 12,920
இரண்டாவது வருடத்தின்போது (மாதாந்தம்) - ரூ. 13,040
மூன்றாவது வருடத்தின்போது (மாதாந்தம்) - ரூ. 13,160.

பிரிவு 3உ(ii) இன் கல்வித் தகைமைகளுக்கமைய ஆட்சேர்க்கப்படும் பயிலுனர்களுக்கு அவர்களது ஆறுமாத கால பயிற்சிநெறியின்போது மாதாந்தம் ரூ. 13,160 கொடுப்பனவு செய்யப்படும். இக்கொடுப்பனவானது நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியுடன் நீடிக்கப்பட்ட பயிற்சிநெறிக் காலத்துக்கும் தொடர்ந்து வழங்கப்படுவதோடு ஏனைய சலுகைகளுக்கோ உரிமைகளுக்கோ உரித்துரிமை பெற மாட்டார்கள்.

(ஈ) நீர்ப்பாசனப் பயிலுனர்கள் அரசாங்கத்தால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் தாபன விதிக்கோவை மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கு உட்படல் வேண்டும். அவர்களுக்கு லீவு அல்லது புகையிரத அனுமதிப்பத்திரங்கள் என்பன பயிற்சிக்காலத்தின்போது உரித்துடையதாகாது.

(உ) பயிலுனர்கள் தமது பயிற்சிக்காலம் முடிந்த பின்னர் இவர்கள் பொறியியல் உதவியாளர் வகுப்பு II தரம் II இற்கு நியமிக்கப்படுவதுடன் அவர்களுக்கு ஆரம்ப நியமனத் திகதியிலிருந்து (03) மூன்று வருடங்களுக்கு தகுதிகாண் காலமாகக் கணிக்கப்படும்.

(ஊ) தாபன விதிக்கோவையின் பந்தி II இன் பிரிவு 10-12 வரையான ஏற்பாடுகள் இச்சேவைக்கு உரித்துடையதாகும்.

(எ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பொறியியல் உதவியாளராக 5 வருடங்கள் கட்டாய சேவை செய்வதற்கு உடன்படிக்கையொன்றில் கையொப்பமிடுமாறு வேண்டப்படுவர். உடன்படிக்கைக்கிணங்க அவ் உத்தியோகத்தர் கட்டாய கால சேவை நிறைவேற்றத் தவறின், அவர்/அவள் உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள மொத்தத் தொகையையும் அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டும்.

6. விண்ணப்பதாரர்கள் பின்வரும் சான்றுப்பத்திரங்களின் பிரதிகளை தமது விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :-

(அ) பெற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பச் சான்றிதழ் ;
(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சை சான்றிதழ் ;
(இ) க. பொ. த. (சா. த.) பரீட்சை சான்றிதழ் ;
(ஈ) பதிவாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ் ;
(உ) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்னடத்தைச் சான்றிதழ் 3 (அதில் ஒன்று இறுதியாகக் கல்வி கற்ற பாடசாலை அதிபரின் மூலமும் மற்றது நிரந்தர வதிவிடப் பிரதேச கிராமசேவை உத்தியோகத்தரிடமிருந்து பெறப்படல் வேண்டும்.

**குறிப்பு**.- மேற்குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் திருத்தியனுப்பப்பட மாட்டாது.

7. மாகாண அல்லது அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.

8. விண்ணப்பதாரர்கள் கொழும்பில் நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சைக்கென தமது சொந்தச் செலவிலேயே சமுகமளித்தல் வேண்டும்.

9. தேவை ஏற்படுமிடத்து நாட்டின் எந்தப் பகுதியிலும் எந்நேரத்திலும் சேவையாற்ற தயாராக இருத்தல் வேண்டும். குறிப்பாக தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் கீழ்வரும் நிலையங்களில் ஏதாவது ஒன்றில் குறைந்தபட்சம் ஐந்து (5) வருடங்கள் சேவை செய்யுமாறு கேட்கப்படுவர். அவ்வாறு விருப்பமில்லாதவர்கள் விண்ணப்பிக்க வேண்டிய தேவையில்லை. நிலையங்களாவன- நீர்ப்பாசன பிராந்திய அலுவலகங்களான அம்பாறை, பொத்துவில், கல்முனை, அக்கரைப்பற்று, அனுராதபுரம், பதவிய, இராஜாங்கனய, ஹுருளுவெவ, மாபாகட, பதுளை, கந்தேகெட்டிய, நவகிரி, ஊறுகாமம், திஸ்ஸ, வீரகெட்டிய, ஹம்பாந்தோட்டை வெள்ளவாய, பிபிலை, மொனராகலை, பொலன்னறுவை, கௌதுள்ள, எலஹெர, இங்கினிமிட்டிய, புத்தளம், மூதூர், கந்தளாய், கோமரங்கடவளை, முருங்கன், வவுனியா மற்றும் திட்ட அலுவலகங்களுக்கும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் வேலைத்தலங்கள் அனைத்தும் சாதாரணமாக மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில் பிரயாண வசதிகள், இருப்பிட வசதிகள், மிகவும் குறைவாக காணப்படும் இடங்களில் அமைந்துள்ள தென்பதை விண்ணப்பதாரர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

10. விண்ணப்பத்தில் ஏதாவது பொய்த்தகவல்கள் கொடுக்கப்பட்டு ஆட்சேர்ப்புக்கு முன் தெரியவரின் பரீட்சார்த்தியுரிமையானது இரத்துச் செய்யப்படும். ஆட்சேர்ப்புக்குப் பின் இவ்வாறான பொய்த்தகவல்கள் தெரியவரின் அவரது சேவை முற்றுப்பெறும்.

11. அரச பதவிகள் நியமனங்களுக்குரிய ஒழுங்குவிதிகளை இலங்கை அரசாங்க வர்த்தமானி பகுதி I : பகுதி (IIஅ) இல் பார்க்க.

எந்திரி எச். பி. எஸ். சோமசிறி,
நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம்.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
இல. 230, பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 7,
2010.05.06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சு**

**நீர்ப்பாசனத் திணைக்களம்**

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கான பொறியியல் உதவியாளர் பதவி

1. (அ) முழுப்பெயர் :----.

(ஆ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

2. பால் :----.

3. (அ) தபால் முகவரி :----.

(ஆ) நிரந்தர முகவரி :----.

(இ) தொலைபேசி இல. :----.

(ஈ) கையடக்க தொலைபேசி இல. :----.

(உ) மின்னஞ்சல் முகவரி :----.

4. வதிவிட மாவட்டம் :----.

5. பிரதேச செயலாளர் பிரிவு :----.

6. பிறந்த திகதி (பிறப்புச் சான்றிதழ் பிரதியொன்றை இணைக்கவும்) :

(அ) வருடம் ----- மாதம் ----- திகதி -----.

(ஆ) பிறந்த இடம் :----.

(இ) 2010.06.10 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ------ மாதங்கள் ------ நாட்கள் ------.

7. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

8. நீர் ஒரு இலங்கைப் பிரசையா ? : (ஆம்/இல்லை) :----.

இனம் :

| | |
|---|---|
| சிங்களவர் | ☐ |
| இலங்கைத் தமிழர் | ☐ |
| இந்தியத் தமிழர் | ☐ |
| முஸ்லிம் | ☐ |
| மலாயர் | ☐ |
| பறங்கியர் | ☐ |
| ஏனையோர் | ☐ |

9. (i) கல்வித் தகைமைகள் (சான்றுப்பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும்) :
க. பொ. த. (சா. த.) பரீட்சை :

முதல் அமர்வு :
சுட்டெண் :----, வருடம் :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

2 ஆம் அமர்வு :
சுட்டெண் :----, வருடம் :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சை :
சுட்டெண் :----, வருடம் :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. கணிதம் | |
| 2. பௌதீகவியல் | |
| 3. | |
| 4. | |

10. தொழில்நுட்ப தகைமைகள் (சான்றுப்பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும்). (தயவுசெய்து பயிற்சிநெறியின் பெயரையும் தொழில்நுட்பக் கல்லூரியின் பெயரையும் தருக.) :----.

11. நீர் அரச திணைக்களத்தில் அல்லது அரச கூட்டுத்தாபனத்தில் முன்னர் சேவையாற்றியிருப்பின் :----.
நீர் ஏன் இராஜினாமா/சேவையை விட்டுவிலகல்/சேவையை தொடராமை/சேவை நீக்கம்/ஏற்பட்டதற்கான காரணத்தைக் குறிப்பிடவும் :----.

12. தற்போது உத்தியோகத்திலிருப்பின் கீழ்வரும் விபரங்களைத் தருக :

(அ) பதவி :----.
(ஆ) நிறுவனம் :----.
(இ) நியமனத் திகதி :----.
(ஈ) தொழிலின் தன்மை :----.

13. என்னால் மேலே கூறப்பட்டுள்ளவை யாவும் உண்மையானதும், சரியானதும் என உறுதி கூறுகின்றேன். மேலும் இவ்விண்ணப் பத்தில் பிழையான தகவல்கள் ஏதும் உள்ளடக்கப்பட்டிருப்பின் அது செய்யப்படுவதற்கு தகைமையற்றதாகும் என நான் நன்கு அறிவேன். அத்தோடு அது ஆட்சேர்ப்பு பின்னர் தெரியவரின் எந்தவித நஷ்டஈடுமின்றி உத்தியோகம் முடிவடைவதற்கு உரிய காரணமாக அமையும் என்பதையும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்கள தலைவரின் விதப்புரை**

(அரசாங்க திணைக்களங்களில் மாகாண சபையில் உள்ளவர்களுக்கு மட்டும்)

................................ என்பவர் இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் தொழில் புரிகிறார். இவரது/இவளது வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானது எனவும், இதில் வேண்டப்பட்டுள்ள தேவைகளுக்கும் நிபந்தனைகளுக்குமிணங்க இவர் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர் எனவும் உறுதி கூறுகின்றேன். அவர்/அவள் தெரிவுசெய்யப்படின் விடுவிக்க முடியும்/முடியாது எனவும் உறுதி கூறுகின்றேன்.

----,
திணைக்கள/நிறுவன/அதிகாரமளிக்கப்பட்டுள்ள
உதத்தியோகத்தரின் கையொப்பம்.
(அலுவலக முத்திரை)

பெயர் :----.
முகவரி :----.
பதவி :----.
திகதி :----.

5-563

---

## இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I இல் உள்ள அலுவலர்களை விசேட தரத்திற்கு தரமுயர்த்துதல்

இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பின் பந்தி 3 இன் பிரிவு 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள விசேட தரத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையில் நிலவும் வெற்றிடங்களுக்கு அலுவலர்களை தரமுயர்த்துவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. 1458/2 ஆம் இலக்க 2006.08.14 ஆந் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் திருத்தம் செய்த 1419/3 ஆம் இலக்க 2005.11.14 ஆந் திகதிய இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைவாக 2005.01.01 ஆந் திகதி தொடக்கம் 2010.12.31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்கு ஏற்புடையதாக விசேட தரத்திற்கு தரமுயர்த்துதல் பிரிவு 17(இ) இன்படி மேற்கொள்ளப்படும்.

**3. தரமுயர்த்தப்படும் முறை :**

3.1 பூர்த்திசெய்யவுள்ள வெற்றிட எண்ணிக்கையின் இரு மடங்கிற்கு மேற்படாத அளவிலான அலுவலர்கள் அமைச்சரவையினால் நியமிக்கப்படுகின்ற 3 உறுப்பினர் களைக் கொண்டதொரு குழுவினால் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு உட்படுத்தப்படுவர்.

3.2 கீழ்க்குறிப்பிட்டுள்ள 4 ஆம் பந்தியின் 4.1 மற்றும் 4.2 இன்கீழ் காட்டப்பட்டுள்ள 1 ஆம், 2 ஆம் தொகுதிகளின்கீழான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்களில் இருந்து பதவி வெற்றிடங்களில் 80% உம், 4.3 மற்றும் 4.4 ஆம் பந்திகளின்கீழ் காட்டப்பட்டுள்ள 3 ஆம் 4 ஆம் தொகுதிகளின் கீழான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்களில் இருந்து பதவி வெற்றிடங்களில் 20% உம் சேவை முதுமுறை மற்றும் திறமை அடிப்படையில் தரமுயர்த்துவதன் மூலம் நிரப்பப்படும்.

முதுமுறை மற்றும் திறமை ஆகியவற்றைக் கருத்திற் கொள்ளும்போது சேவை பிரமாணக் குறிப்பில் 14(1) (ஈ) அல்லது 19(1) (ஆ) தகைமைகளைப் பெற்றிருத்தல் அல்லது இடைப்பட்ட காலப்பகுதியில் குறித்த தகைமைகளைப் பூர்த்திசெய்வதற்கு முடியுமாக இருத்தலானது திறமையாகக் கருதப்படும்.

(அப/09/2906/317/105 மற்றும் 2010.01.01 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம்) அதன்படி திறமை பெற்றுள்ள அலுவலர்கள், தரமுயர்வுகளைப் பெறுவதற்கு முன்னர் இ. நி. சே. வகுப்பு/தரம் I இல் உள்ள முதுமுறை ஒழுங்கு முறையில் விசேட தரத்திற்கு தரமுயர்த்தப்படும்.

3.3 அதன்படி ஒவ்வொரு தரமுயர்வுத் திகதியிலும் உரிய முதுமுறை அட்டவணையானது குறித்த ஒவ்வொரு திகதியிலும் தரமுயர்வு பெறுவதற்கு தகைமைகளைப் பெற்றுள்ள அலுவலர்கள் தரமுயர்வு பெறுவதற்கு முன்னர் நிலவிய முதுமுறை ஒழுங்கு முறையில் தயாரிக்கப்படும்.

3.4 2005.01.01 ஆந் திகதிக்கு ஏற்புடையதாக மேற்கொள்ளப்பட்ட தரமுயர்வுகள் அ.ப./09/1372/317/048 ஆம் இலக்க 2009.10.22 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின்படி மேற்கொள்ளப்படும்.

**4. தகைமைகள்**.- பின்வரும் 4 தொகுதிகளில் வேண்டப்படும் ஏதேனும் ஒரு தொகுதிக்குரிய தகைமைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

4.1 தொகுதி I : சேவைப் பிரமாணத்தின் 17(இ) (1) இன்கீழ் தகைமை பெறும் அலுவலர்கள் பூர்த்திசெய்ய வேண்டிய தகைமைகள் :-

4.1.1 இலங்கை நிர்வாக சேவையின் தரம்/வகுப்பு I இல் 5 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். (தாபன விதிக்கோவையின் V:2:5:4, XII:16:9, XII:16:10, XII:36:1:4(I) ஆம் (II) ஆம் நிபந்தனைகள் மற்றும் ஒழுக்காற்று தீர்மானங்களின் நிபந்தனைகளின் கீழ் 5 வருடகாலப் பகுதியைக் கணிக்க வேண்டும்.)

4.1.2 சேவைப் பிரமாணத்தின் 14(1) (ஈ) அல்லது 19(1) (ஆ) வின் கீழான தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் அல்லது இடைக்காலத்திற்குள் பூர்த்திசெய்யமுடியுமென சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடியவாறான ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

4.1.3 தரமுயர்வுக்காக தகைமைகளைப் பூர்த்திசெய்யும் திகதிக்கு உடன் முந்திய 5 வருட காலத்திற்குள் எல்லா சம்பள ஏற்றங்களை உழைத்துப் பெற்றிருத்தலும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆளாகாமல் இருத்தலும் வேண்டும். (தாபன விதிக்கோவையின் XII:16:7 இன்கீழ் கிடைக்கப்பெறும் சம்பள ஏற்றங்களின் தரமுயர்வுகளுக்காக கருத்தில் கொள்ளப்பட மாட்டாதென தாபன விதிக்கோவையில் xii:16:9 இல் குறிப்பிடப்பட்டுள்ளதால் இதன்போது ஏற்புடையதாகக் கொள்ளப்பட மாட்டாது.)

4.1.4 இல் குறிப்பிட்டுள்ள காலப்பகுதிக்குள்ளான வருடாந்த செயலாற்றுகை மதிப்பீடுகளின்படி வேலையும் நடத்தையும் திருப்திகரமானதென பரிந்துரை செய்திருத்தல்.

4.2 தொகுதி 2 : சேவைப் பிரமாணத்தின் 17(இ) (1) அட்டவணை 1 இன்கீழ் தகைமை பெறும் அலுவலர்கள் பூர்த்திசெய்ய வேண்டிய தகைமைகள் :-

4.2.1 2005.11.14 ஆந் திகதி அல்லது அதற்கு முன் விசேட தரத்தின் பதவியொன்றுக்கு விதிமுறையாக நியமனமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4.2.2 2005.11.14 ஆந் திகதி அல்லது அதற்கு முன் சேவைப் பிரமாணத்தின் 14(1) (ஈ) இன்கீழான தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

4.2.3 மேற்படி 4.1.3 மற்றும் 4.1.4 இன் தேவைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

4.3 தொகுதி 3 : சேவைப் பிரமாணத்தின் 17(இ) (11) இன்கீழ் தகைமை பெறும் அலுவலர்கள் பூர்த்திசெய்ய வேண்டிய தகைமைகள் :-

4.3.1 இலங்கை நிர்வாக சேவையின் தரம்/வகுப்பு 1 இல் 10 வருட சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல்.
(தாபன விதிக்கோவையின் V:2:5:4, XII:16:9, XII:16:10, XII:36:1:4(I) ஆம் (II) ஆம் நிபந்தனைகள் மற்றும் ஒழுக்காற்றுத் தீர்மானங்களின் நிபந்தனைகளின்கீழ் 10 வருடக் காலப்பகுதியைக் கணிக்க வேண்டும்.

4.3.2 19(1) (ஆ) வின் கீழான தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் அல்லது இடைக்காலத்திற்குள் பூர்த்திசெய்ய முடியுமென சட்டரீதியாக ஏற்றுக்கொள்ள முடியுமென ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

4.3.3 சேவைப் பிரமாணத்தின் 14(1) (ஆ) இன் கீழான தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

4.3.4 மேற்படி 4.1.3 மற்றும் 4.1.4 இன் தேவைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

4.4 தொகுதி 4 : சேவைப் பிரமாணத்தின் 17(இ) II அட்டவணை 2 இன்கீழ் தகைமை பெறும் அலுவலர்கள் :

4.4.1 2005.11.14 ஆந் திகதி அல்லது அதற்குமுன் விசேட தரத்தின் பதவியொன்றுக்கு விதிமுறையாக நியமனம் பெற்றிருத்தல் வேண்டும்.

4.4.2 மேற்படி 4.3.1, 4.3.3 மற்றும் 4.3.4 இன்கீழான தேவைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

2005.01.01 ஆந் திகதிக்கு மேற்படி தொகுதி 4 இன் கீழும், 2005.07.01 மற்றும் 2006.01.01 ஆந் திகதிகளுக்கு மேற்படி 1 ஆம் 3 ஆம் தொகுதிகளின்கீழும் தகைமை பெறுகின்ற அலுவலர்கள் இத்துடன் இருக்கும் படிவத்திற்கு அமைவாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை அமைச்சுக்களின்

செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஊடாக 2010.06.30 ஆந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அரசாங்க நிர்வாக அமைச்சின் செயலாளருக்கு அனுப்ப வேண்டும்.

அதன் பின்னராக அனுப்புகின்ற விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா தென்பதுடன் பிழையானதும் முழுமை பெறாததுமாக அனுப்பி வைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தற்போது ஓய்வுபெற்றிருப்பினும் 2005.01.01 ஆந் திகதிவரை அல்லது அன்றைய திகதிக்கு பின்னரான ஒரு திகதிவரை சேவையில் இருந்த மற்றும் தரமுயர்விற்கு மேற்படி பந்தி 4 இல் எந்தவொரு தொகுதியின் கீழும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள முன்னரான தரமுயர்வு சந்தர்ப்பத்தில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியபோதும் தரமுயர்வுபெறாத அல்லது விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க முடியாதுபோன அலுவலர்கள் இத்தரமுயர்வுகளுக்காக விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப்படிவம் www.pubad.gov.lk ஊடாக பெற்றுக் கொள்ளலாம்.

அமைச்சரவையின் பணிப்பின்படி,

ட. திசாநாயக்க,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

2010.05.06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த அலுவலர்களை விசேட தரத்திற்கு தரமுயர்த்தல்

(அலுவலக உபயோகத்திற்கு)

விண்ணப்பப்பத்திர இல. : S / F

பகுதி (அ)- அலுவலரால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

1. பெயர் :----.
   1.1 முழுப்பெயர் : திரு./திருமதி/செல்வி ----.
   1.2 நியமனக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள பெயர் :----.
2. பிறந்த திகதி :----.
3. பிரத்தியேக முகவரி :----.
4. தொலைபேசி இல. :----.
   4.1 வதிவிடம் :----.
   4.2 கையடக்கம் :----.
5. 5.1 பதவி :
   (தற்போது வகிக்கும்/தற்போது ஓய்வுபெற்றிருந்தால் ஓய்வு பெறும்போது வகித்த)
   5.2 தற்போது ஓய்வுபெற்றிருப்பின் ஓய்வுபெற்ற திகதி :----.
6. அமைச்சு/திணைக்களம் :----.
7. அலுவலக முகவரி :----.
8. அலுவலக தொலைபேசி இல. :----.
9. நியமனத் திகதி :
   9.1 இ. நி. சே. தரம் II/ II இற்கு (வகுப்பு III இற்கு) நியமனம் பெற்ற திகதி :----.
   9.2 இ. நி. சே. தரம் II/ I இற்கு (வகுப்பு II இற்கு) தரமுயர்வு பெற்ற திகதி :----.
   9.3 இ. நி. சே. தரம் I இற்கு (வகுப்பு I இற்கு) தரமுயர்வு பெற்ற திகதி :----.
   (தரம் I இற்கு/வகுப்பு I இற்கான தரமுயர்வுக் கடிதத்தில் சான்றுப்படுத்திய பிரதியை இல. 9.3 ஆக இலக்கமிட்டு இணைக்க வேண்டும்.)
10. வகுப்பு I இற்கு தரமுயர்வு பெற்றதன் பின் சேவையில் இராத காலப் பகுதிகளும் ஒழுக்காற்றுத் தண்டனைகளின் பேரிலான சேவைக் காலமும் :----.

    10.1 விடுமுறை பெற்றுக்கொண்டதன் பேரில் சேவைக்காலம் குறைதல் (ஏற்புடையதாயின் மட்டும் பூர்த்திசெய்யவும்) :

| தொடர் இல. | விடுமுறைகளை அங்கீகரிப்பதற்குரிய நிபந்தனைகள் | காலப்பகுதி | | சேவைக்காலம் குறைகின்ற நாட்கணக்கு | | |
|---|---|---|---|---|---|---|
| | | தொடக்கம் | வரை | ஆண்டு | மாதம் | நாள் |
| (i) | தாபன விதிக் கோவையின் V:2:5:4 | | | | | |
| (ii) | தாபன விதிக் கோவையின் XII:16 | | | | | |
| (iii) | முகாமைச் சேவைகள் சுற்றறிக்கை இல. 10 | | | | | |
| (iv) | முகாமைச் சேவைகள் சுற்றறிக்கை இல. 33 | | | | | |
| (v) | தாபன விதிக் கோவையின் XII:36 | | | | | |
| (vi) | வேறு (சம்பளமற்ற விடுமுறைகள்) | | | | | |
| சேவைக்காலம் குறைகின்ற மொத்த நாட்கள் | | | | | | |

(விடுமுறைகளை அனுமதித்த கடிதங்களின் சான்றுப்படுத்திய பிரதிகளை 10.1 (i), 10.1(ii), 10.1(iii) ஆக விடயத்திற்கு உரியதாக இலக்கமிட்டு இணைக்க வேண்டும்.)

10.2 ஒழுக்காற்று விடயங்களின் பேரில் சேவைக்காலம் குறைவடைதல் (ஏற்புடையதாயின் மட்டும் பூர்த்திசெய்யவும்) :----.

| ஒழுக்காற்றுத் தீர்மானம் | குற்றப்பத்திரத் தின்படி குற்றம் நிகழ்ந்த காலப்பகுதி | சேவைக்காலம் குறையும் நாட் கணக்கு | | |
|---|---|---|---|---|
| | | ஆண்டு | மாதம் | நாள் |
| (i) சம்பள ஏற்றங்கள் .................... ஐ பின்போடல் | | | | |
| (ii) வேறு | | | | |
| (iii) சேவைக்காலம் குறையும் மொத்த நாட்கணக்கு | | | | |

(ஒழுக்காற்றுத் தீர்மானங்களின் சான்றுப்படுத்திய பிரதிகளை 10.2 (i), 10.2(ii), 10.1 (iii) ஆக விடயத்திற்கு உரியதாக இலக்கமிட்டு இணைக்க வேண்டும்.)

10.3 10.1 மற்றும் 10.2 இன் கூட்டுமொத்தம் :
ஆண்டு --------, மாதம் ----, நாள் ----.

10.4 வகுப்பு I இற்கு நியமனம் பெற்ற திகதியிலிருந்து முன்னுக்கு மேற்படி 10.3 இன் காலப்பகுதியை நீக்கிவிட்டபின் திகதி :----.

11. **பதவி உயர்வு கோருவதற்காக தகைமை பெறும் திகதி :**
(2005.01.01, 2005.07.01 மற்றும் 2006.01.01 ஆகிய திகதிகளில் எந்தத் திகதி என்பது) :----.

11.1 தொகுதி 1: மேற்படி 10.4 இல் குறிப்பிடப்பட்ட திகதி தொடக்கம் 5 வருடங்கள் பூர்த்தியாகும் திகதிக்குப் பின்னராக வரும் மிகக்கிட்டிய தரமுயர்வுக்குத் திகதி அல்லது 10.4 ஏற்புடையதாகாவிடின் வகுப்பு/ தரம் I க்கு நியமனம்பெற்ற திகதி முதல் 5 வருடங்கள் பூர்த்தியாகும் திகதியாகும்.

11.2 தொகுதி 2 : 2005.01.01 ஆந் திகதி அல்லது விசேட தரத்தின் பதவியொன்றுக்கு விதிமுறையாக நியமனம் பெற்ற திகதிக்கும் பின்னராக வரும் மிகக் கிட்டிய பதவி உயர்வுத் திகதியாகும்.

விசேட தரத்தின் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :

(அ) 2005.01.01 ஆந் திகதிக்கு முன்னராக இருப்பின் விண்ணப்பம் செய்வதற்கு தகைமை பெறும் திகதி 2005.01.01 ஆகும்.

(ஆ) 2005.01.01 - 2005.11.14 இற்கு இடைப்பட்டதாக விருப்பின் அந்தத் திகதிக்கு பின்னதாக வரும் மிகக்கிட்டிய உயர்வுத் திகதி, அதாவது 2005.07.01 அல்லது 2006.01.01 ஆகும்.

(2005.11.14 ஆந் திகதி பின்னரான விசேட தரத்தின் பதவியொன்றுக்கு செய்யப்பட்ட நியமனங்கள் இத்தொகுதியின்கீழ் உள்ளடக்கப்பட மாட்டாது.)

11.3 தொகுதி 3 : மேற்படி 10.4 இல் குறிப்பிடப்பட்ட திகதி தொடக்கம் 10 வருடங்கள் பூர்த்தியாகும் திகதிக்குப் பின்னராக வரும் மிகக்கிட்டிய தரமுயர்வுத் திகதி அல்லது 10.4 ஏற்புடையதாகாவிடின் வகுப்பு/தரம் I இற்கு நியமனம் பெற்ற திகதி முதல் 10 வருடங்கள் பூர்த்தியாகும் திகதியாகும்.

11.4 தொகுதி 4 : 2005.01.01 ஆந் திகதி அல்லது விசேட தரத்தின் பதவியொன்றுக்கு விதிமுறையாக நியமனம் பெற்ற திகதிக்குப் பின்னராக வரும் கிட்டிய தரமுயர்வுத் திகதியாகும்.

விசேட தரத்தின் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

(அ) 2005.01.01 ஆந் திகதிக்கு முன்னராக இருப்பின் விண்ணப்பம் செய்வதற்கு தகைமை பெறும் திகதி 2005.01.01 ஆகும்.

(ஆ) 2005.01.01-2005.11.14 க்கு இடைப்பட்டதாக இருப்பின் அத்திகதிக்குப் பின்னராக வரும் மிகக்கிட்டிய தரமுயர்வுத் திகதி, அதாவது 2005.07.01 அல்லது 2006.01.01 ஆகும்.

(2005.11.14 ஆந் திகதிக்கு பின்னர் விசேட தரத்தின் பதவியொன்றுக்கு செய்யப்பட்ட நியமனங்கள் இத்தொகுதியின்கீழ் உள்ளடக்கப்பட மாட்டாது.)

11.5 வர்த்தமானி அறிவிப்பின் பந்தி 4 இன்படி தகைமை பெறுகின்ற தொகுதி :----.
மேற்படி தெளிவுபடுத்தலின் பிரகாரம் விண்ணப்பிக்க முடியுமான திகதி :----.

12. உடன் முந்திய 5 வருட காலத்திற்குள் சம்பள ஏற்றங்களை பெற்றிருத்தல் :

12.1 மேற்படி 11.5 இன்படி பதவி உயர்வுக்குத் தகைமை பெறுகின்ற திகதிக்கு உடன் முந்திய 5 வருடங்களுள் அனைத்துச் சம்பள ஏற்றங்களும்** உழைத்துப் பெறப்பட்டுள்ளது/உழைத்துப் பெறப்படவில்லை**.
(தாபன விதிக்கோவையின் xii :16:9, xii :16:18 மற்றும் xii:36:1:4(1) (11) ஆகியவற்றின்கீழ் பெற்றுள்ள சம்பள ஏற்றங்கள் தரமுயர்விற்காக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.)

* (தேவையற்ற சொற்களை கீறிவிடவும்).

12.2 11.5 இல் குறிப்பிட்டுள்ள திகதிக்கு உடன்முந்திய 5 வருடங்களுள் சம்பள ஏற்றங்களைப் பெறாதிருப்பின் 5 சம்பள ஏற்றங்களைப் பெறுகின்ற திகதி வரை தரமுயர்வுக்குத் தகைமை பெறும் திகதியை மீண்டும் கணிக்க வேண்டும். அதன்படி தகைமை பெறும் திகதி **....................

** (சம்பள ஏற்றத் தாள்களின் சான்றுப்படுத்திய பிரதிகளை 12.5 ஆக இலக்கமிட்டு இணைக்கவும்) :----.

13. **உடன் முந்திய 5 வருடங்களுள் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆளாகாது இருத்தல்.**

13.1 கோவைப்படி மேற்போந்த 11.5 இன்கீழ் குறிப்பிட்டுள்ள பதவி உயர்வுத் திகதி அல்லது 12.2 இன்கீழ் திருத்தப்பட்ட திகதிக்கு உடன் முந்திய 5 வருடங்களுக்குள் எதுவித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை.
(திணைக்களத் தலைவர் இதனை எழுத்திலான ஒரு வெளிப்படுத்தலின் மூலம் சான்றுப்படுத்த வேண்டும்) விண்ணப்பப் படிவத்தில் "ஆ" பகுதியின் கீழ்-

13.2 13.1 இல் குறிப்பிட்டுள்ள காலப்பகுதிக்குள் ஒழுக்காற்றுத் தண்டனை ஒன்றுக்கு ஆளாகி உள்ளதுடன் 10.2 இன்கீழ் விடயங்கள் தரப்பட்டிருந்தால் மற்றும் அதன்படி 11.5 இன்கீழ் குறிப்பிட்டுள்ள திகதி திருத்தப்படுமாயின் அந்தத் திகதி :----.

13.3 11.5 இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திகதி 12.2 மற்றும் 13.2 இன்படி திருத்தம் செய்யப்படுமாயின் புதிய திருத்தம் செய்த திகதி :----.

14. உடன் முந்திய 5 வருட காலப்பகுதிக்குள் வருடாந்த செயலாற்றுகை மதிப்பீட்டின்படி வேலையும் நடத்தையும் திருப்திகரமானதென வெளிப்படுத்தல்.

மேற்படி 11.12 அல்லது 13 இன்படி தகைமை பெறும் திகதிக்குரிய ஆண்டிற்கு உடன்முந்திய 5 ஆண்டுகளை பின்வரும் அட்டவணையின் முதலாம் நிரலில் குறிப்பிட வேண்டும். உரிய செயலாற்றுகை மதிப்பீட்டறிக்கைகள் 5 இன் சான்றுப்படுத்திய பிரதிகளை இணைக்க வேண்டும். செயலாற்றுகை அறிக்கையின் இறுதி மதிப்பீட்டில் மாற்று பரிந்துரைகள் 1 இக்கு மேல் காட்டப்பட்டுள்ளதும் உரிய அலுவலரால் கையொப்பமிடப்படாத மற்றும் பதவி முத்திரை இடப்படாத அறிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

| ஆண்டு | இறுதி மதிப்பீடு சிறந்தது/சாதாரண அளவை விட உயர்மட்டத்தில் உள்ளது/ திருப்திகரமானது/ திருப்திகரமில்லை | உரிய அலுவலர் கையொப்பமிட்டு பதவி முத்திரை இடப்பட்டுள்ளது/ இடப்படவில்லை |
|---|---|---|
| | | |

ஒவ்வொரு ஆண்டின் செயலாற்றுகை மதிப்பீட்டு அறிக்கைகளின்படி ஒவ்வொரு வரிசைகளையும் நிரல்களையும் பூர்த்திசெய்தல் வேண்டும்.

15. சேவைப் பிரமாணத்தின் 14(ஈ) தகைமையைப் பூர்த்திசெய்திருத்தல் (ஏற்புடையதாயின் மட்டும் பூர்த்திசெய்யவும்.)

15.1 பட்டநிலை பின்படிப்பும் பட்டத்தின் பெயர் :----.
15.2 விடயத்துறை :----.
15.3 அந்தப் பட்டத்தை வழங்கிய பல்கலைக்கழகம் :----.
15.4 அந்தப் பல்கலைக்கழகம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஒரு பல்கலைக்கழகமாக அங்கீகரிக்கப் பட்டுள்ளதா ? :----.
15.5 பட்டத்தின் காலப்பகுதி (ஆரம்பம் மற்றும் இறுதி) :----.
15.6 பட்டம் செல்லுபடியாகும் திகதி :----.
(15.1 ஆக இலக்கமிட்டு பட்டச் சான்றிதழ் மற்றும் விபரமான பெறுபேற்றுத்தாளின் சான்றுப்படுத்திய பிரதிகளை இணைக்க வேண்டும்.)
15.7 தற்போதைக்கும் பட்டநிலை பின்படிப்பு பட்டத்தை பூர்த்தி செய்யாவிடில் மற்றும் தற்போது பட்டநிலை பின்படிப்புப் பட்டத்தை கற்பதற்காக பதிவுசெய்யப்பட்டிருப்பின்,

பதிவுசெய்யப்பட்ட திகதி :----.
பாடநெறி முடிவடையும் திகதி :----.
(நிரூபிப்பதற்காக உரிய ஆவணங்களை 15.6 இலக்கமிட்டு இணைக்க வேண்டும்.)

16. சேவைப் பிரமாணத்தின் 19(1) (ஆ) வின் கீழான தகைமையைப் பூர்த்தி செய்திருத்தல் (ஏற்புடையதாயின் பூர்த்திசெய்யவும்.)

16.1 ஆய்வுக் கட்டுரையின் தலைப்பு :----.

16.2 ஆய்வுக் கட்டுரை பூர்த்திசெய்த (செல்லுபடியான) திகதி :----. (பூர்த்திசெய்யப்பட்டதாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தால் வழங்கப்பட்ட சான்றிதழின் சான்றுப்படுத்திய பிரதியை 16.1 ஆக இலக்கமிட்டு இணைக்க வேண்டும்.)

16.3 தற்போது பூர்த்திசெய்யப்படவில்லையெனில் மற்றும் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிப்பதற்காக பதிவுசெய்யப்பட்டிருப் பின்-

16.3.1 பதிவுசெய்யப்பட்ட திகதி :----.
16.3.2 முடிவடையும் திகதி :----.
(நிரூபிப்பதற்காக உரிய ஆவணங்களை 16.3 ஆக இலக்கமிட்டு இணைக்க வேண்டும்.)

17. விசேட தரத்தின் பதவியொன்றுக்கு நியமிக்கப்பட்டிருத்தல் (ஏற்புடையதாயின் பூர்த்திசெய்யவும்) :----.

| காலப்பகுதி | பதவிப்பெயரும் சேவை நிலையமும் | நியமனத்தை வழங்கியது அமைச்சரவை/ ஆளுநர் அவர்கள்/ அரசாங்க சேவை ஆணைக்குழு | நியமனத்தின் தன்மை கடமைகளை நிறைவேற்று தல்/பதில் கடமை நிறை வேற்றல்/ நிரந்தர/ ஒப்பந்த |
|---|---|---|---|
| | | | |

(எல்லா நியமனக் கடிதங்களதும் சான்றுப்படுத்திய பிரதிகளை 17.1, 17.2 ஆக இலக்கமிட்டு இணைக்க வேண்டும்.)

மேற்படி 15, 16 மற்றும் 17 ஆகியவற்றில் ஏற்புடையதாகும் விடயங்களுக்கு மட்டும் பதிலளிக்கவும்.

மேற்படி 1 தொடக்கம் 17 இலக்கங்கள் வரை சரியானதும் முழுமையானதுமான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட விண்ணப்பத்தையும், இணைத்து அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ள எல்லா ஆவணங்களதும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் ஒவ்வொன்றினதும் வலதுபக்க மேல் மூலையில் விடயத்திற்குரிய இலக்கத்தை குறிப்பிட்டும் இலக்க ஒழுங்கு வரிசைப்படி ஒரு கோவையாகத் தயாரித்து இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பமும்
பதவிப் பெயரும் உத்தியோகபூர்வ
முத்திரையும்.

திகதி :----.

பகுதி : (ஆ)- திணைக்களத் தலைவரால் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு/உரிய அமைச்சு

1. அலுவலரால் மேலே தரப்பட்டுள்ள எல்லா விடயங்களும் சரியானவையாகும்.

2. இலக்கம் 10.12.13 மற்றும் 17 இற்கு உரிய விடயங்கள் கோவையுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டன. குறிப்பிட்டுள்ள விடயங்கள் சரியானவை என்றும், எல்லா விபரங்களும் முழுமையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், தொடர்புடைய எல்லா

ஆவணங்களும் சான்றுப்படுத்திய பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளது என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

3. அலுவலருக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை அல்லது ஒழுக்காற்று விசாரணை உள்ளது/இல்லை.

3.1 மேற்படி "உள்ளது" என பதிலளித்தால் குற்றம் புரியப்பட்ட திகதி :----.

3.2 ஒழுக்காற்று அதிகாரியினால் குற்றப்பத்திரம் வழங்கப்பட்ட திகதி :----.

4. திரு./திருமதி/செல்வி ..................................................... இன் கடமை/ வருகை/நடத்தை திருப்திகரமானது. அவருடைய செயலாற்றுகை, தலைமைத்துவம், ஆற்றல் என்பவற்றையும் அடுத்த பதவி உயர்வுக்கு உரியதாக பொறுப்புடன் பதவி வகிக்கும் ஆற்றலையும் அவதானித்தேன்.

அவர் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதை பரிந்துரைக்கின்றேன்.

5. சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தையும், ஒவ்வொரு விடயத்திற்கும் உரியதாக இலக்கமிட்டு இலக்க ஒழுங்குவரிசைப்படி சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளையும் இணைத்து தயாரிக்கப்பட்ட கோவையை இத்துடன் அனுப்புகிறேன்.

.....................................,
திணைக்கள/நிறுவனத் தலைவரின்
கையொப்பமும் பதவிப்பெயரும்
அலுவலக முத்திரையும்.

திகதி :----.

**குறிப்பு**.- தேவையற்ற பதங்களை கீறிவிடவும்.

பகுதி- (இ) தொடர்புடைய அமைச்சின் செயலாளரால் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

செயலாளர்,
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

1. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த திரு./திருமதி/ செல்வி ................................ இன் கடமை மற்றும் நடத்தை பற்றிய திணைக்கள/நிறுவனத் தலைவரின் பரிந்துரைகளுடன் உடன்படுகின்றேன்/உடன்படவில்லை.

2. அலுவலரின் கடமை/ நடத்தை/ விசேட திறமைகள் மற்றும் செயலாற்றுகை மதிப்பீட்டுக்கு உட்படுத்தினேன்.

திரு./ திருமதி/ செல்வி ................................ இலங்கை நிர்வாக சேவையில் விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கு பரிந்துரை செய்கின்றேன்./செய்யவில்லை.

(பரிந்துரை செய்யாவிட்டால் காரணத்தை சுருக்கமாக குறிப்பிடவும்.)

3. சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தையும், ஒவ்வொரு விடயத்திற்கு உரியதாக இலக்கமிட்டு இலக்க ஒழுங்கு வரிசைப்படி சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளையும் இணைத்து தயாரிக்கப்பட்ட கோவையை இத்துடன் அனுப்புகிறேன்.

------,
செயலாளர்.
---------------- அமைச்சு,
அலுவலக முத்திரை.

திகதி :----.

5-565

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின்கீழ் மாவட்ட, பிரதேச செயலகங்களில் சேவையாற்றுவதற்காக நியமனம் செய்யப்படுவதற்கு இலங்கை தொழில்நுட்பவியற் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2010

மேற்கூறப்பட்ட பதவிக்கு ஆட்சர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படவுள்ள திறந்த போட்டிப் பரீட்சைக்காக தகுதி பெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில் தங்கள் தகைமைத் திறமைகளை நிரூபிக்கும் பரீட்சார்த்திகள் அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின்கீழ் மாவட்ட, பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப் படுவதற்கு இலங்கை தொழில்நுட்பவியற் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு நியமனம் செய்வதற்காகத் தெரிவுசெய்யப்படுவர்.

3. **வயதெல்லை**.- பரீட்சார்த்திகள் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். இருப்பினும் ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் இருப்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

4. (I) **கல்வித் தகைமைகள்** :

(i) க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தியெய்தியிருக்க வேண்டும்.

(ii) க.பொ.த. (உ/த) பரீட்சையில் தூயகணிதம், பிரயோக கணிதம், பௌதீகவியல் உள்ளடங்கலாக முன்று பாடங்களில் சித்தியெய்தியிருக்க வேண்டும்.

(II) தொழில்சார் தகைமைகள்.- பரீட்சார்த்திகள் மேற்படி 04(I) இல் குறிப்பிட்ட கல்வித் தகைமைகளுடன் பின்வரும் தொழில்சார் தகைமைகளில் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும் :

(i) மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில் நுட்பவியல் டிப்ளோமா

(ii) தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா

(iii) கல்வி, உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா

(iv) இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்பவியல் டிப்ளோமா

(v) இலங்கைப் பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியற் பரீட்சையில் முதலாம் பகுதியைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்

(vi) மேலே குறிப்பிட்ட தொழில்நுட்பத் தகைமைகளுக்குச் சமமானதென இலங்கைத் தொழில்நுட்பவியற் சேவைச் சபையினால் ஏற்றுகொள்ளப்படும் வேறு ஏனைய தகைமைகள்

5. **சம்பள அளவுத்திட்டம்**.- அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 06/2006 இன் கீழ் உள்ள எம். என் 3-2006 ஏ (ரூபா 15,005-4 x 180-6 x 240 - 11 x 320 - 20 x 360 = ரூபா 27,885).

பரீட்சார்த்திகள் நான்காவது சம்பளப் படியேற்றத்தினை அடைய முன்பு முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

6. **சேவை நிபதனைகள்**.- (i) இப் பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

(ii) தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் பணிப்பின் பேரில் மாவட்ட, பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்படுவர்.

(iii) தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் தீவின் எந்தப் பாகத்திலும் சேவையாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

(iv) தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் மூன்று வருட காலத் தகுதிகூர் காலப்பகுதியொன்றிற்கு உட்படுத்தப்படுவர். ஏற்கனவே சேவையிலுள்ள பரீட்சார்த்திகள் ஒரு வருட பதிற்சேவைக் காலத்திற்கு உட்படுத்தப்படுவர்.

(v) தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் தாபன விதிக் கோவைகள், நிதி ஒழுங்கு விதிகள், அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள், அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் கட்டளைகள், திணைக்களத்தினால் வெளியிடப்படும் அறிவுறுத்தல்கள் ஆகியவற்றில் கட்டிக்காக்கப்பட்ட ஏற்பாடுகளால் கட்டுப்படுத்தப்படுவர்.

7. (I) **ஆட்சேர்ப்பு முறை**.- இந்தப் பரீட்சையானது தொழில் நுட்பவியற் சேவைச் சபையின் மேற்பார்வையின் பேரில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் மட்டும் நடாத்தப்படும்.

(II) **பரீட்சைத் திட்டம்** :

(i) பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் நடாத்தப்படும். பரீட்சார்த்தியால் விண்ணப்பிக்கப்பட்ட மொழிமூலமானது மாற்றப்படுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

(ii) பரீட்சார்த்திகள் பரீட்சையில் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.

(iii) பரீட்சார்த்திகள் பரீட்சையை நடத்தும் நோக்கத்திற்காகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்குக் கட்டுப்படுவதுடன் இந்த ஒழுங்கு விதிகளை மீறுமிடத்து பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கும் உட்படுதல் வேண்டும்.

(iv) பரீட்சைப் பாடங்கள்.- பரீட்சையானது இரண்டு வினாப் பத்திரங்களைக் கொண்டிருக்கும் :

(1) நுண்ணறிவுப் பரீட்சை
(2) தொழில்நுட்பவியல் வினாப்பத்திரம்

8. **பாடவிதானம்**.- (1) நுண்ணறிவுப் பரீட்சை (கால அளவு) : 1 மணித்தியாலம் - புள்ளிகள் 100

இப் பத்திரமானது பரீட்சார்த்தியின் பொதுவிவேகம், தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், கருத்துக்களைப் பகுப்பாய்வு செய்யும் திறமை என்பவற்றைப் பரீட்சிக்கும் வினாக்களைக் கொண்டிருக்கும்.

(2) தொழில்நுட்பவியல் வினாப்பத்திரம்.- (கால அளவு) : 3 மணித்தியாலங்கள் - புள்ளிகள் 100

இப்பத்திரமானது திட்டங்களை வடிவமைத்தல், விளங்கிக் கொள்ளுதல், நீர் விநியோகம், வடிகாலமைப்பு முறைமைகள், கழிவகற்றல் என்பவற்றிற்காக கட்டிட நிர்மாணத்தின் கோட்பாடுகள் மீது பரீட்சார்த்தியின் திறமையை அளவிடும் பொருட்டு வடிவமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும்.

ஆட்சேர்ப்புக்கான முன்னுரிமைப் பட்டியலானது ஒவ்வொரு பத்திரத்துக்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்று தெரிவுசெய்யப்படுகின்ற பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகளின் மீது தயாரிக்கப்படும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் இந்த வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கும் பொருட்டு பரீட்சை மண்டபத்திற்கு கேத்திரகணித வரைவுச் சாதனங்களையும் ஏனைய உபகரணங்களையும் கொண்டுவரும்படி வேண்டப்படுகின்றனர்.

9. **பிழையான தகவல்களை அளிப்பதற்கான தண்டனை**.- விண்ணப்பப்படிவத்தினை நிரப்பும் போது சரியான தகவல்களை அளிப்பதில் கவனம் எடுக்கப்படுதல் வேண்டும். பரீட்சார்த்தியொருவர் தகுதியற்றவராக இருப்பதாகக் காணப்படுமிடத்து அவரது பரீட்சார்த்த உரிமையானது பரீட்சையின் விதி, ஒழுங்குகளின் பிரகாரம் இந்தப் பரீட்சைக் காலப்பகுதியிலோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்த நிலையிலும் இரத்துச் செய்யப்படலாம். தவறான தகவல்களை அளிக்கும் ஒருவராகக் காணப்படும் விண்ணப்பதாரரொருவர் எந்த நிலையிலும் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு உரியவராகக் காணப்படுவர். பரீட்சாரத்தியொருவருக்கு அனுமதி அட்டையொன்றினை வழங்குதலானது பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவைப்படும் தகைமைகளை அவர் பெற்றுள்ளார் என்னும் கருத்தல்ல.

10. **பரீட்சைக் கட்டணம்**.- இந்தப் பரீட்சைக் கட்டணம் ரூபா 300/= ஆகும். இக் கட்டணமானது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்பு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20 - 03 - 20 - 13 இல் வரவு வைக்கும் பொருட்டு ஏதாவது மாவட்டச் செயலகம் /பிரதேச செயலகத்தில் செலுத்தப்படுதல் வேண்டும். மாவட்டச் செயலகம் /பிரதேச செயலகத்திலிருந்து பெறப்பட்ட பற்றுச்சீட்டானது விண்ணப்பப்படிவத்தில் இயைபுடைய கூட்டினுள் பத்திரமாக ஒட்டப்படுதல் வேண்டும். (எதிர்காலச் சான்றாதாரத்துக்காக பரீட்சார்த்திகள் பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியினைத் தம்வசம் வைத்திருப்பது உசிதமானது). எந்தவொரு சூழ்நிலையிலும் பரீட்சைக் கட்டணமானது மீளளிக்கப்பட மாட்டாது. காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ பரீட்சைக்கட்டணமாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

11. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பங்கள் ஏ4 (21 X 29 செ.மீ ) சாதாரண தாள்கள் (normal half sheets) அளவிலான கடதாசிகளை உபயோகித்து-

I. இல 01 - 03 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும்

II. இல 04 முதல் ஏனைய பந்திகள் அடுத்த பக்கத்திலும் உள்ளடங்குமாறு விண்ணப்பப்பத்திரம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

III. அரைகுறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட, மாதிரிப்படிவத்துடன் இணங்காதவாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் புகைப்படப் பிரதியொன்றினை எடுத்து வைத்திருப்பது புத்திசாதூரியமானது. பரீட்சை அறிவித்தலில் கொடுக்கப்பட்ட மாதிரியுடன் இணங்குமாறு விண்ணப்பப்படிவம் தயார் செய்யப்படுவதனை உறுதிப்படுத்துவது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். சிங்களம், தமிழ் மொழி மூலங்களில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களில் ஆங்கில மொழியில் பரீட்சையின் பெயரானது குறிப்பிடப்படுதல் அவசியமாகும்.

(ஆ) பூர்த்தியாக்கப்பட்ட பரீட்சைக்கான விண்ணப்பப்படிவமானது 2010 யூன் 21 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ கீழே குறிப்பிட்ட முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் :-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு, வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை,
பரீட்சைகள் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

விண்ணப்பத்தினை உள்ளடக்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை தொழில்நுட்பவியற் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் - தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு - 2010" என்று தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(இ) பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் பத்திரிகைகளில் அறிவித்தலொன்று பிரசுரிக்கப்படும். இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்பு கூட அனுமதி அட்டை பெறப்படாது இருப்பின், விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட முறையில், பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். பரீட்சைகள் திணைக்களத்திற்கு அழைப்பினை மேற்கொள்ளும்போது பின்வருவனவற்றைக் கைவசம் வைத்திருப்பது உசிதமானது. விண்ணப்பப்படிவம் மற்றும் தங்கள் வசமுள்ள பற்றுச்சீட்டின் அத்தாட்சிப்படுத்திய புகைப்படப் பிரதிகள், பதிவு செய்த பற்றுச்சீட்டு, விண்ணப்பதாரி கொழும்பிற்கு வெளியே இருக்குமிடத்து, அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய தொலைநகல் இலக்கம் கொண்ட வேண்டுதல் கடிதம்.

12. பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை நிரூபிப்பதற்காக பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை ஒப்புவிக்கும்படி வேண்டப்படுகின்றனர் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

13. இந்த ஒழுங்குவிதிகளின் பொருட்டு ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விபரங்கள் அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் பணிப்பின் மூலம் மேற்கொள்ளப்படும். பரீசார்த்திகள் இந்தப் பரீட்சை தொடர்பான பொதுவிதி, ஒழுங்குவிதிகள் மூலம் கட்டுப்படுத்தப்படுவர்.

டீ. திசாநாயக்க,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07,
2010 மே 21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின்கீழ் மாவட்ட, பிரதேச செயலகங்களில் சேவையாற்றுவதற்காக நியமனம் செய்யப்படுவதற்கு இலங்கை தொழில்நுட்பவியற் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகதத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2010**

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்) (உதாரணம்- PERERA, A.B.C) :----.

1.2 முழுப்பெயர் (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 தேசிய ஆளடையாள அட்டை இல. :

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்)

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில் /தமிழில்) :----.

2.3 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்) :----.

3. 3.1 பால் : பெண் 1, ஆண் - 0
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 2010, யூன் 21 ஆந் திகதிக்கு வயது-

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள்

4. கல்வித் தகைமைகள் :

4.1 க. பொ. த. (சா.த) பரீட்சையின் விபரங்கள் :-

1. பரீட்சையின் ஆண்டும் மாதமும் :----.
2. சுட்டிலக்கம் :----.
3. பெறுபேறுகள் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

4.2 க.பொ.த. (உ.த) பரீட்சையின் விபரங்கள்

1. பரீட்சையின் ஆண்டும் மாதமும் :----.
2. சுட்டிலக்கம் :----.
3. பெறுபேறுகள் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

5. தொழில்சார் தகைமைகள் :----.

| நிறுவனம் | கற்ற கற்கை நெறிகள் | கால அளவு | சித்தி | சான்றிதழ் இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|---|
| | | | | |

6. ஏனைய தகைமைகள் :----.

7. ஏற்கனவே அரசாங்க சேவையில் இருப்பின்-

7.1 திணைக்கள் /நிறுவன முகவரி :----.
7.2 தற்போதைய பதவி :----.
7.3 சேவைக்காலம் :----.
7.4 இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையது மானதா அல்லது தற்காலிகமானதா ? :----.

8. நீதிமன்றமொன்றில் ஏதாவது தவறுக்காகக் குற்றத் தீர்ப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளீர்களா ? :----.
(பொருத்தமான கூட்டினுள் ✓ அடையாளமிடுக). விடை ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடவும்.

ஆம் ☐ இல்லை ☐

9. பணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டின் விபரம் :

9.1 பணம் செலுத்திய அலுவலகம் :----.
9.2 பற்றுச் சீட்டின் இலக்கமும் திகதியும் :----.
9.3 தொகை :----.

பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டிவிடவும்

10. **பரீட்சார்த்தியின் உறுதியுரை :**

1. இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மை யானவை எனவும் சரியானவையெனவும் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் சில பகுதிகளைப் பூர்த்தி செய்யாது மற்றும் அல்லது தவறாகப் பூர்த்தி செய்து ஏற்படுகின்ற நட்டத்தை ஏற்றுக் கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும் இதில் எல்லாப்பகுதிகளையும் சரியாகப் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. இதில் உள்ளடக்கப்பட்ட ஏதாவது விபரங்கள் தவறாகக் காணப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னர் நான் தகுதியற்றவ னாவேன் என்றும் தவறு நியமனத்திற்கு பின்னர் கண்டு பிடிக்கப்படுமிடத்து சேவையில் இருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நானறிவேன்.

3. இப் பரீட்சையை நடாத்தும் பொருட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சகல நிபந்தனைகளுடனும் இணங்கியொழுகுவதற்கு நான் இத்தால் சம்மதிக்கிறேன்.

4. மேலே குறிப்பிட்ட எத்தகவல்களையும் மாற்றஞ் செய்ய மாட்டேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

11. **பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்.**- இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................. என்பவர் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரிந்தவர் எனவும் ஆந் திகதி அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளார் என்றும் நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்தியவரின் கையொப்பம்

கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்திய உத்தியோகத்தரின் முழுப் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
உத்தியோக முத்திரையால் உறுதிப்படுத்தல் வேண்டும்.

5-417